ஸ்டாலின்

★

இந்நூலில் காணப்படுகின்ற கருத்துக்கள் என் சொந்தமல்ல. அலெக்ஸான்ட்ரோவ்என்ற பேராசிரியரும், மற்றும் ஐவரும் எழுதிய ஜோஸப்ஸ்டாலின் என்ற ஆங்கில நூலின் கருத்துக்கள்,

S. சண்முகம்

★

உண்மைப் பிரசுரம்
தேவகோட்டை

முதற்பதிப்பு: மார்ச், 53.

0-4-0

"இன்று உலகில் மூன்று பெரியார் தான் இருக்கிறார்கள். ஒருவர் சிறந்த இராஜதந்திரி ஜோஸப் ஸ்டாலின்; மற்றொருவர் கணித அறிஞர் ஈன்ஸ்டின் மூன்றாமவர் மாபெரும் நாடகாசிரியர். தன்னடக்கம் அவர் பெயரை வெளியிட வொட்டாமல் தடுக்கிறது. எனினும், சொல்லி விடுகிறேன். அவர் தான் பெர்னார்ட்ஷா"—

— பெர்னார்ட்ஷா

அச்சிட்டோர்:
சங்கர் பிரிண்டர்ஸ்
114, பிராட்வே
சென்னை-1

அத்தியாயம் 1.

ஜோசப் ஸ்டாலின் 21-12 1879-ல் ரஷ்யாவில் டிபிலிஸ் மாகாணத்தில் கோரி நகரில் பிறந்தார். அவர் தந்தையின் பெயர் விசேரியன் சுகாஸ்விலி. விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர். ஜார்சியன் இனத்தைச்சேர்ந்தவர். செருப்புத் தைக்கும் செம்மான். ஸ்டாலினது தாயின் பெயர் எகாடெரினு.

1888-ல், ஸ்டாலின். கோரி நகரிலுள்ள மதக்கல்லூரியில் சேர்ந்தார். 1894-ல் கல்லூரிப் பயிற்சி முடிவுற்றது.

அப்பொழுது தொழிலும் தொழிலாளர் இயக்கமும் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தன. ரஷ்யா எங்கும் மார்க்ஸிஸம் காட்டுத் தீப்போல் பரவியது. தொழிலாளி வர்க்கத்தின் விடுதலைக்காக லெனின் அமைத்த பீட்டர்ஸ்பர்க் போராட்டச் சங்கம் வலுப்பெற்றது. முதலாளித்துவம் வேரூன்றி இருந்த டிரான்ஸ்காக் கேசியா பிரதேசத்தில், தொழிலாளர் இயக்கம் மிக வேகமாய் வளர்ச்சி யுற்றது. அது ஜார் ஏகாதிபத்தியத்தின் அடிமை நாடாயிருந்தது.

ஸ்டாலின் படித்துவந்த மதக்கல்லூரியில் கையாளப்பட்ட அடக்குமுறை, அவரை ஒரு புரட்சிக்காரராக்கியது. பதினைந்தாவது வயதில் அவர் புரட்சி இயக்கத்தில் ஈடுபட்டார். "நான் பதினைந்தாவது வயதில் புரட்சி இயக்க்த்தில் சேர்ந்தேன். டிரான்ஸ் காக் கேசியாவில் சட்ட விரோதமான ரஷ்ய மார்க்ஸீய வாதிகளின் கூட்டத்துடன் தொடர்புகொண்டேன். அந்தக் கூட்டத்தார் என் உள்ளத்தைக் கவர்ந்தனர். சட்ட விரோதமான மார்க்ஸீய இலக்கியத்தில் எனக்குத் தனி ஆர்வம் உண்டாயிற்று" என்று எமில்லட்விக் என்னும் ஜெர்மன் எழுத்தாளரிடம் ஸ்டாலின் கூறினார். கார்ல் மார்க்சும் ஏங்கல்சும் எழுதிய 'மூலதனம்' * 'கம்யூனிஸ்டு

அறிக்கை'* முதலிய நூல்களை ஸ்டாலின் ஆராய்ந்தார். தத்துவம், பொருளாதாரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளிலும் நன்கு தேர்ச்சி பெற்றார்.

அவர் புத்தகப்படிப்போடு நின்றுவிடவில்லை. டிபிலிஸ் நகரத்தொழிலாளரிடையே வேலை செய்து வந்தார். தான் கற்றதை அவர்களுக்குப் போதித்தார். அவர்களுடைய வாழ்க்கைப் போராட்டத்தை முன்னின்று நடத்தினர். கொள்கையோடு நடைமுறை அனுபவமும் பெற்றார். "1898-ஆம் ஆண்டு என் நினைவுக்கு வருகிறது எனக்கு முதன் முதலாக டிபிலிஸ் தொழிலாளர்களுக்கு மார்க்ஸிஸம் கற்பிக்கும் பொறுப்புக் கொடுக்கப்பட்டது. அந்தத் தோழர்களிடையேதான் நான் முதலாவது புரட்சி ஞான ஸ்நானம் பெற்றேன். டிபிலிஸ் தொழிலாளர்தான் எனது முதல் ஆசிரியர்கள்" என்று ஸ்டாலின் குறிப்பிடுகிறார்.

அவர் புரட்சி இயக்கத்தில் தொடர்புகொண்டிருந்ததைக் கல்லூரி அதிகாரிகள் அறிந்தார்கள். 1899-மே மீ 29-ல் அவர் கல்லூரியிலிருந்து வெளியேற்றப்பட்டார். அன்று முதல் அவர் தம்வாழ்க்கையைப் புரட்சிக்காகவே தத்தம் செய்தார்.

லெனின் நடத்திய தீப்பொறி (இஸ்க்ரா) என்ற பத்திரிக்கை 1900-ம் வருடம் டிசம்பர் மாதத்தில் வெளிவந்தது. அதன் கொள்கையை ஸ்டாலின் முற்றிலும் ஆதரித்தார். உண்மையில் லெனின்தான் மார்க்ஸிஸத்தின் தலைவனாக இருக்கத் தகுதி உள்ளவர் என்று அவர் முடிவு கட்டினர். லெனின் புரட்சிக்கலையில் தலை சிறந்தவர் என்று அவர் எண்ணினர். அவர் வழியைத் தனதாகக் கருதினர். அவ்வழியிலிருந்து அவர் ஒருபோதும் விலகியதே இல்லை. லெனின் இறந்த பின் நம்பிக்கையோடும், திறமையோடும் புத்துலகை அமைத்து வதார்.

1900—1901-ல் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியால் டிபிலிஸ் ஆலைகளிலும் ரெயில்வே தொழிற்சாலை

---

1. Capital 2. Communist Manifesto

யிலும் வேலை நிறுத்தங்கள் பல நிகழ்ந்தன. அப்பொழுது ஜார் அரசாங்கத்தால் நாடுகடத்தப்பட்ட மைக்கேல் காலினின், அங்கிருந்தார். ஸ்டாலினும் காலினினும் அந்த வேலை நிறுத்தங்களுக்குத் தலைமைதாங்கினர். 1901 மே தினவிழாவை ஸ்டாலின் திறம்பட நடத்தினர். அதனை "காக்கஸஸ் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நிகழ்ச்சி" என்று லெனின் 'தீப்பொறி'யில் குறிப்பிட்டிருந்தார். அது காக்கஸஸ் தொழிலாளர் இயக்கத்திற்குப் புத்துணர்ச்சி தந்தது. பாட்டாளிகளின் புரட்சி இயக்கம் ஜார் சர்க்கார் கண்ணை உறுத்தத் தொடங்கியது. ஸ்டாலினைக்கைது செய்யும்படி அரசாங்கம் கட்டளை பிறப்பித்தது. அவர் தலை மறைவாக இருந்து தொழிலாளர் இயக்கத்தைநடத்திவந்தார். அன்று முதல் அவரது வீர வாழ்வு தொடங்கியது.

1901 செப்டம்பர் மாதத்தில் 'போராட்டம்' என்ற சட்டவிரோதமான பத்திரிகையை ஸ்டாலின் ஆரம்பித்தார். அதன் முதல் தலையங்கத்தில் அவர் குறிப்பிட்டதாவது, "தொழிலாளர் இயக்கம் கொள்கைப் போராட்டம் ஆகிய பிரச்னைகளில் எழுகின்ற ஒவ்வொரு கேள்விக்கும் பத்திரிகை தெளிவான விடையளிக்கவேண்டும்."

பத்திரிகை தொழிலாளர் இயக்கத்தை நடத்தவேண்டும். தொழிலாளருடன் நெருங்கிய தொடர்புகொள்ள வேண்டும். தொழிலாளருடைய வழிகாட்டியாக இருக்க வேண்டும்என்பது அவர்கருத்து.

தொழிலாளர் இயக்கமும் விஞ்ஞான சோஷலிஸமும் தொடர்புகொள்ளவேண்டும் என்பதையும் மக்களின் விடுதலை இயக்கத்திற்குத் தொழிளாளிவர்க்கம் தலைமை தாங்கவேண்டும என்பதையும் அவர் வற்புறுத்தினர். பாட்டாளி மக்களின் அரசியல் கட்சியை அமைத்து அதைப் பலப்படுத்தும்படி அவர் வேண்டுகோள் விடுத்தார்.

'பாகு' பட்டணத்தில் அவரது தோழர் ஒருவர் இரகசிய அச்சாலை ஒன்றை நிறுவிப் பல மொழிகளிலும் துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு வழங்கினர். தொழில்

வளர்ச்சியுற்றிருந்த பாகு, டிபிலிஸ், பட்டும் ஆகிய நகரங்களில் சமூக ஜனநாயகக் கட்சியை அமைக்கும் ஸ்தாபன வேலையில் ஸ்டாலின் தீவிரமாக ஈடுபட்டார். பல பிரதேசங்களிலும் கட்சி ஸ்தாபனங்களை அமைத்து அவற்றை மத்திய ஸ்தாபனத்தோடு இணைத்தார். டிரான்ஸ்காக்கேசியன் ஸ்தாபன அமைப்பை ஓர் எடுத்துக்காட்டாக லெனின் அடிக்கடி கூறுவது வழக்கம்.

1902-ல், ஸ்டாலின் சிறையிடப்பட்டார். புரட்சி இயக்கம் அதனுல் தடைப்படவில்லை. அவர் கட்சியோடு தொடர்பு வைத்திருந்தார்.

1903-ல் நடந்த இரண்டாவது கட்சிக் காங்கிரஸில் போல்ஷவிக்குகளுக்கும் மென்ஷவிக்குகளுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது. சிறையில் இருந்த ஸ்டாலின் அதைக்கேள்விப்பட்டார். அவர் சிறிதும் தயங்காமல் லெனின் தலைமையை ஆதரித்த போல்ஷவிக்குகள் பக்கம் நின்றார்.

"சோஷலிஸம்தான் முக்கியம் தொழிலாளர் இயக்கத்தில் ஒன்றுமில்லை என்று சொல்லமுடியுமா?" என்று ஸ்டாலின் ஒரு கேள்வியை எழுப்புகிறார். அதற்கு அவர் கூறும் பதில்" முடியாது. கற்பனையில் புதுஉலகைக்கண்டுகளிக்கும் சிலரே அப்படிச்சொல்லுவர். வருங்காலத்தில் எப்போதாவது தொழில் வளர்ச்சியுற்று தொழிலாளிவர்க்கப்புரட்சியால் முதலாளித்துவத்தின் கொடுமையிலிருந்து விடுதலை அடைவர் அதுமிகவும் நீண்டதும் கடினமானதுமான வழி. **விஞ்ஞானசோஷலிஸம் ஒரு திசைகாட்டி. தொழிலாளர் இயக்கம் என்னும்கப்பலுக்கு அது வழிகாட்டும். அதைப் பயன்படுத்தாவிட்டால் அது துருப்பிடித்துப்போகும். தொழிலாளர் இயக்கம் வலுப்பெற்று வழிகாட்டும்பொழுது சோஷலிஸம் உயிருள்ளதாகிறது.**

சோஷலிஸம் என்ற குறிக்கோள் இல்லாமல் நடத்தப்படும் தொழிலாளர் இயக்கம் திசைகாட்டி இல்லாத கப்பலைப்போன்றது. தட்டுத்தடுமாறி எப்படியாவது கப்பல் மறுகரை சேரும் என்பது உன்மைதான். ஆனுல் திசை

காட்டி இருந்தால் அது மிக எளிதில் விரைவாகக் கரை சேருமல்லவா?

"சோஷலிஸக் குறிக்கோளுடன் தொழிலாளர் இயக்கம் நடத்தப்படுமாகில் அது தொழிற் சங்க இயக்கம் என்னும் தேக்கத்திலிருந்து விடுபடும். சமூக ஜனநாயகம் என்றும் புரட்சி இயக்கமாக ஓடத்துடங்கும். வெகு விரைவில் பாட்டாளிமக்களின் ஆட்சியை அமைக்க அது கருவியாகும்."

ஸ்டாலினுடைய இந்த முக்கிய கொள்கையை ரஷ்ய தொழிலாளரின் போராட்ட சரித்திரம் மெய்ப்பித்தது.

"தொழிலாளர் இயக்கம் சோஷலிஸத்துடன் இணைக்கப்படவேண்டும்.

"தங்கள் பொருளாதாரக் கோரிக்கைகளுக்காக ஒன்றுபட்டு நடத்தும் தொழிற்சங்க இயக்கம் சிறுபான்மையினரான முதலாளிகளின் பிடிப்பிலுள்ள ஆட்சியை பெரும்பான்மையினரான பாட்டாளிமக்கள் கைப்பற்றுவதற்குரிய கருவியாக மாறவேண்டும். அந்த வேலையைச் செய்ய வேண்டியது நமது கடமை. இதை நிறைவேற்றவொட்டாமல் தடுப்பவர்களை நம் பாதையிலிருந்து அகற்றுவது நமது முதல் வேலை.

"இதுவரை நமது கட்சி அனுதாபமுள்ள அனைவரையும் வரவேற்றது. அது இப்போது ஒருமத்தியஸ்தாபனமாகிவிட்டது. அது ஒரு கோட்டை. அதன் கதவுகள் தகுதி உள்ளவர்களுக்குமட்டும் திறக்கப்படும். தேசிய தொழிற்சங்கஇயக்கம் ஆகியவற்றில் பாட்டாளி மக்களின் கவனத்தைத்திருப்பி வர்க்க உணர்ச்சியை மழுங்க வைக்க அதிகாரவர்க்கம் முயற்சிக்கின்ற காலத்தில் நாம் மிகவும் கவனமாயிருக்க வேண்டும்" என்று ஸ்டாலின் அறிவுறுத்தினர்.

தேசிய இன வெறியைக் கிளப்பி பாட்டாளி மக்களின் ஒற்றுமையைக் குலைக்க சந்தர்ப்பவாதிகள் முயற்சித்த பொழுது அவர் எதிர்த்துப் போராடினர். தேசிய இனப் பிரச்னையில் அவர் நிபுணர். மார்க்ஸிஸமும் தேசிய இனப் பிரச்னையும் என்ற நூலை அவர் வெளியிட்டார்."

1903ல் கிழக்கு சைபீரியா பிரதேசத்திற்கு நாடு கடத்தப் பட்டிருந்த ஸ்டாலினுக்கு லெனின் ஒரு கடிதம் அனுப்பி இருந்தார். அதைக் குறித்து ஸ்டாலின் குறிப்பிட்டதாவது: "1903ல் முதன் முதலாக எனக்கு லெனினுடைய நட்புக் கிடைத்தது நேரிலல்ல எழுத்து மூலமாகத்தான். ஆனால் அத் தொடர்பு பசுமரத்தாணிபோல் என் உள்த்தில் பதிந்து விட்டது. நான் கட்சி வேலை செய்யும் போதெல்லாம் அது என் கண் முன் நின்றது. அப்பொழுது நான் நாடு கடத்தப்பட்டு சைபீரியாவில் இருந்தேன் அந்தக் குறிப்பு இரத்தினச் சுருக்கமாக இருந்தது. கட்சியின் வேலையைப் பற்றி நிர்தாட்சண்யமான விமர்சனம் அதில் அடங்கியிருந்தது...."

ஸ்டாலின் நீண்டகாலம் சைபீரியாவில் இருக்கவில்லை. போல்ஷவிக் கட்சியைக் கட்டவும் லெனின் திட்டத்தை நிறை வேற்றவும் அவர் சைபீரியாவிலிருந்து தப்பிச் சென்று காக்கஸ் போய்ச் சேர்ந்தார்.

இரண்டாவது காங்கிரஸில் சமூக ஜன நாயகக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவுக்குப் பிறகு ஸ்டாலினுக்குப் பொறுப்பு அதிகமாயிற்று. மென்ஷவிக்குகளின் பிற்போக்குத் தன்மையை எதிர்த்துப் போராடினார். இதன் மத்தியில் பாகு எண்ணைத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்குத் தலைமை தாங்கினார். முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் சமரசம் ஏற்பட்டது. ரஷ்ய தொழிலாளர் இயக்கத்தில் அதுவே முதல் வெற்றி. லெனினது கருத்துக்களை மக்களிடையே பரப்புவதற்காக ஸ்டாலின் விரிவான முறையில் பிரச்சாரம் செய்தார் சட்டவிரோதமான பல துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டார். அவருடைய பிரசுரம் ஒன்றில் தொழிலாளி வர்க்கத்திற்குச் சோஷலிஸ உணர்ச்சி அவசியம் என்பதை குறிப்பிடுகிறார். அதே பொழுது கொள்கைக்கு மித மிஞ்சிய முக்கியத்துவம் தந்து தொழிலாளரின் பொருளாதார நிலைமையும் தொழிலாளரியக்கத்தையும் மறந்து விடக் கூடாதென்று எச்சரிக்கிறார்.

புரட்சி என்ற சொல் காதில் விழுந்ததும் நடுங்குகின்ற கோழைகள் ஜார்மன்னனுடன் சமரசம் செய்ய

முனேந்தனர். அவர்களுக்கு ஸ்டாலின் சரியான சாட்டை கொடுத்தார். "பிரபுக்களே! சீமான்களே! உங்கள் முயற்சி வீணுகும். ரஷ்யப் புரட்சி தடுக்க முடியாதது. அது வந்தே தீரும். காலேயில் சூரியன் கிழக்கில் தோன்றுவது எவ் வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயம் ரஷ்யப் புரட்சி எழு வதும். சூரியன் தோன்ருதபடி உங்களால் தடுக்க முடி யுமா? நகரத்திலும் கிராமத்திலும் வசிக்கிற பாட்டாளி வர்க்கந்தான் முக்கியமான புரட்சி சக்தி அதை நடத்திச் செல்வது சமூக ஜன நாயகத் தொழிற் கட்சி. மித வாதிகளே அவ்வரிய பெரிய செயலாற்றுவது நீங்களல்ல!

எதேச்சாதிகார அரசாங்கத்தைத் தூக்கி எறிந்து விட்டு குடியரசை அமைப்பதற்குள்ள ஒரேவழி ஆயுதம் தாங்கிய புரட்சிதான் என்ற லெனின் கொள்கையை ஸ்டா லின் ஆதரித்தார். மக்கள் தாங்களாகவே புரட்சி செய்து வெற்றி அடைந்தால்தான் அவர்களுக்கு விடுதலே கிட் டும். பின்னர் தற்காலிக அரசாங்கம் அமைக்கப்படும். தற் காலிக சர்க்காரைப் பற்றி லெனினுடைய கருத்தை ஸ்டா லின் தெளிவு படுத்தினர். அது மக்கள் புரட்சியிலிருந்து தோன்றுவதால் பாட்டாளிவர்க்கத்தின் நலன்களேப் பாதுகாப்பதாக இருக்கவேண்டும்

"முதலாளிகள் தாங்கள் அனுபவித்து வரும் சுக் போகங்களேயும் அநீதியான சலுகைகளேயும் எளிதில் விட்டுக் கொடுக்கமாட்டார்கள். தங்கள் ஆதிக்கத்தில் பரம்பரையாக இருந்து வரும் பத்திரிகைகள் ரேடியோக் கள் போன்ற பிரச்சாரக் கருவிகளேயும் போலீஸ் இராணு வம் போன்ற பலாத்கார இயந்திரங்களேயும் தங்கள் நலனேப் பாதுகாக்கப் பயன் படுத்துவர். அவற்றின் துணே கொண்டு சரிந்து விழுகின்ற முதலாளித்துவ சமுதாயத்திற்கு முட்டுக் கொடுக்க முயலுவார்கள். எனவே பெரும் பான்மையினரான பாட்டாளி மக்களின் நலனுக்காகமுதலாளிகளேயும் சுரண்டல்கூட்டத்தாரையும் அடக்கி ஒடுக்க வேண்டியது அவசியமாகும். அதற்காகத் தொழிலாளருக்கும் விவசாயிகளுக்கும் ஆயுதங்கள் வழங்கவேண்டும். மக்களின் விரோதிகளே நிராயுதபாணி களாக்கவேண்டும். இதைச் செய்ய பாட்டாளி மக்களின்

சர்வாதிகாரம் ஒரு கால அளவுக்கு அவசியம். அச்சர்வாதிகாரம் பெரும்பான்மையினரான மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும். முதலாளித்துவ அமைப்பை மீண்டும் நிலை நாட்டச்சதி செய்பவர்களை அது அடக்கியொடுக்கும்” என்று ஸ்டாலின் தெளிவாக்கினார்.

அத்தியாயம் 2.

1905 அக்டோபர் மாதத்தில் பொதுவேலை நிறுத்தம் நடந்தது. பாட்டாளி மக்களின் உறுதிக்கு அது ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியது. ஜார் மன்னன் நடுங்கினன். மக்களுக்கு உரிமைகள் பல வழங்கப்போவதாக அறிவித்தான். "அது வெறும் கண் துடைப்பு. மக்களை மயக்கும் மாயத்திரை" என்று மன்னனின் சூழ்ச்சியை மக்களுக்குக் கூறினர் போல்ஷவிக்குகள் மன்னன் அறிக்கைவிடுத்த அன்று ஸ்டாலின் தொழிலாளர்கூட்டத்தில் பேசினர் "நாம் வெற்றி பெற நமக்கு வேண்டியது ஆயுதம்" என்ருர்.

"இப்பொழுது நடைபெறுகின்ற வேலை நிறுத்தம் ரஷ்ய சரித்திரத்தில், ஏன் உலகசரித்திரத்திலேயே காண முடியாத ஒரு புதுமை. நாடுமுழுவதும் அது பரவாமல் ஒருவேளை இன்றே முடிவடையலாம். ஆனல் அது மீண்டும் வெடிக்கும். நீண்டகாலமாக ஜார் மன்னரின் எதேச்சாதிகாரத்திற்கும் ரஷ்ய மக்களுக்கும் நடந்து வருகிற போராட்டத்திற்கும் அதுமுற்றுப்புள்ளி வைக்கும்" என்று ஸ்டாலின் எழுதினர்.

1905 டிசம்பர் மாதத்தில் அகில ரஷ்ய போல்ஷ்விக்குகளின் மகாநாடு பின்லந்தில் நடந்தது. அப்பொழுது தான் முதல் முதலாகலெனினும் ஸ்டாலினும் சந்தித்தார்கள். 1905 டிசம்பர் புரட்சி தோல்வியுற்றது. போல்ஷ்விக்குகளுக்கும் மென்ஷவிக்குகளுக்கும் உள்ளபகைமை அதிகரித்தது. போல்ஷவிக் விரோதிகளான மென்ஷவிக்கர்கள் சமூகப் புரட்சிக்காரர்கள் அராஜகர்கள் ஆகிய எதிர்ப் புரட்சி சக்திகளை ஸ்டாலின் கொள்கையின் அடிப்படையில் எதிர்த்து மடக்கினர்.

மார்க்ஸ் லெனின் ஆகிய இருவரின் கொள்கைகளை விளக்கிப் பல பிரசுரங்களை வெளியிட்டார். முதல் புரட்சிக்

கும் இரண்டாவது புரட்சிக்கும் இடையே பத்து வருடங்களாகப் போல்ஷவிக்கர்கள் மக்களிடையே திறமையாக வேலை செய்தார்கள். வருங்கால புரட்சி வெற்றி பெறுவதற்காக சலிப்பின்றி உழைத்தார்கள். போல்ஷ்விக் கொள்கை பரவுவதற்காக லெனினும் ஸ்டாலினும் கட்சி அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தினர். தலைமறைவாக வேலை செய்வதற்கான திட்டங்களை வகுத்தார்கள். ஸ்டாலின் தீவிரப்புரட்சிக்காரர் என்பதை அறிந்த ஜார் அரசாங்கம் அவர் மீது கடுமையான அடக்குமுறைகளைப் பிரயோகித்தது. 1902 முதல் 1913 முடிய அவர் ஏழுமுறை கைது செய்யப்பட்டார். ஆறுமுறை நாடுகடத்தப்பட்டார். ஐந்து முறை தப்பித்து ஓடிவிட்டார். கடைசியாக நாடுகடத்தப்பட்ட பொழுது அவர் தப்பி ஓடவில்லை. 1917ல் பிப்ரவரி புரட்சி அவரை விடுவித்தது.

பாகு எண்ணெய் வயல் தொழிலாளர் போராட்டத்தில் முன்னணியில் நின்றார்கள். பாகு நகரம் போல்ஷ்விக் கோட்டையாகத் திகழ்ந்தது. "பாகுவில்தான் இரண்டாவது முறை புரட்சி ஞானஸ்நானம் பெற்றேன்" என்றார் ஸ்டாலின்.

1912-ல், பிரேக் நகரில் கட்சி மகாநாடு ஒன்று நடைபெற்றது. அதில் மென்ஷ்விக்கர்கள் கட்சியிலிருந்து நீக்கப்பட்டனர். லெனின் தலைமையில் போல்ஷ்விக் கட்சி வலுப்பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய கமிட்டியில் ஸ்டாலின் ஒரு அங்கத்தினர் ஆனார். 'பிரவ்டா' என்ற பத்திரிகையை தொடங்குவதென அப்பொழுது முடிவு செய்யப்பட்டது.

1914-ம், வருடம் முதலாவது உலகப்போர் தொடங்கியது. இரண்டாவது அகிலம் தொழிலாளி வர்க்கத்துக்குத் துரோகம் செய்துவிட்டு ஏகாதிபத்திய முகாமைச் சேர்ந்தது. போல்ஷ்விக் கட்சி சர்வ தேசிய கொள்கையைக் கடைப்பிடித்தது. அது போரை எதிர்த்தது.

நாடு கடத்தப்பட்டிருந்த ஸ்டாலின், போல்ஷ்விக் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டார். 1917 பிப்ரவரி புரட்சியில் ஜார் மன்னன் முடிதுறந்தான். தற்காலிக அரசாங்கம்

ஏற்பட்டது. 1917 மார்ச்சு 12-ல், ஸ்டாலின் பெட்ரோகிராடு வந்து சேர்ந்தார். நிபந்தனையின் பேரில் தற்காலிக அரசாங்கத்தை ஆதரிக்கலாம் என்ற பிற்போக்காளர்களை ஸ்டாலின் எதிர்த்தார்.

நாடு கடத்தப்பட்டு நெடுங்காலம் வெளிநாட்டில் வாழ்ந்துவந்த லெனின், 1917 ஏப்ரல் 3-ல் ரஷ்யாவுக்கு திரும்பிவந்தார். புரட்சித் தலைவர் லெனின் வருகையைக் கேட்டு தொழிலாளர் மட்டற்ற மகிழ்ச்சி யடைந்தார்கள். லெனின் 1917 ஏப்ரல் மாதத்தில் ஒரு அறிக்கை வெளியிட்டார். முதலாளித்துவ ஜனநாயக அமைப்பை சோஷலிஸ சமுதாயமாக மாற்றுவதற்கான செயல் முறைத்திட்டம் அதில் விவரிக்கப்பட்டிருந்தது. எனவே அது மிகப் புகழ்பெற்றது. ஜார் ஆட்சி கவிழ்ந்த பிறகு, ஏற்பட்ட நிலைமைக்குத் தக்கவாறு, புதிய போராட்டமும் அவசியமாயிற்று. அது லெனின் திட்டத்தில் அமைந்திருந்தால், மக்கள் புத்துணர்ச்சி பெற்றனர்கள். 1917 ஏப்ரல் 24-ம் நாள், நடந்த போல்ஷ்விக் கட்சியின் ஏழாவது மகாநாட்டில், லெனின் திட்டம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அதே மகாநாட்டில் ஸ்டாலின் தேசிய இனங்களின் உரிமையை விளக்கி ஒரு அறிக்கை வெளியிட்டார். அதன்படி தேசிய இனங்களின் சுய நிர்ணய உரிமை ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒவ்வொரு தேசீய இனமும் தன் தன் விருப்பப்படி தனி அரசு அமைத்துக்கொள்ளலாம். லெனின் ஸ்டாலின் ஆகிய இருவரின் தேசீய இனக்கொள்கை ஒடுக்கப்பட்டுக் கிடந்த சிறுபான்மை இனங்களுக்கு நம்பிக்கை தந்தது. அக்டோபர் புரட்சியை எல்லாத் தேசீய இனங்களும் ஆதரித்ததற்கு தேசீய இனக் கொள்கையே முக்கிய காரணம்.

லெனினுடைய ஏப்ரல் அறிக்கையின் அடிப்படையில் ஸ்டாலின் செயலாற்றி வந்தார். நெருக்கடியான அக்காலத்தில் அவர் குறிப்பிட்டதாவது. "ஒரு சிறையிலிருந்து மற்றொரு சிறைக்கு நான் மாறிக்கொண்டிருந்த காலத்தில் கட்சியின் விருப்பப்படி லெனின்கிராடுக்கு மாற்றப்பட்டேன். அங்கு ரஷ்ய தொழிலாளர் இருந்தார்கள். சர்வதேச பாட்டாளிகளின் குருவாகிய தோழர் லெனினுடன்

நான் தொடர்பு கொண்டிருந்தேன். முதலாளிகளுக்கும் பாட்டாளிகளுக்கும் மாபெரும் மோதல்களும் ஏகாதிபத்ய போரும் நடைபெறும் காலத்தில் தொழிலாளி வர்க்கத்தின் தலைவனுடைய பொறுப்பு என்னவென்பதை அப்பொழுதுதான் முதல் தடவையாக நான் அறிந்தேன். அடக்கி ஒடுக்கப்பட்டுக் கிடந்த தேசிய இனங்களில் விடுதலை வீரர்களும்எல்லா நாடுகளிலுமுள்ள பாட்டாளி மக்களின் முன்னணிப் படையுமான அந்த ரஷ்யத் தொழிலாளரிடமிருந்து நான் மூன்றுவது ஞானஸ்நானம் பெற்றேன்; லெனின் தலைமையில் நான் ரஷ்யாவில் புரட்சிக்கலையின் நுட்பத்தை அறிந்தேன்."

1917-ஜூன் மாதத்தில் லெனினும் ஸ்டாலினும், சரித்திரப் புகழ்பெற்ற ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்தார்கள். அது போல்ஷ்விக் கோஷமிட்டுச் சென்றது. ஜூன் 20ல் அகில ரஷ்ய சோவியத் காங்கிரஸ் கூடியது. அதில் ஸ்டாலின் மத்திய நிர்வாகக் கமிட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1917 ஜூலை தற்காலிக சர்க்கார் பீட்ரோகிராடு நிலைமையைக் கண்டு பீதியுற்று மிருகத்தனமான அடக்குமுறையைக் கையாண்டது. லெனினைக் கைது செய்ய முயன்றது. எனவே லெனின் தலைமறைவாக இருந்தார். காமனேவ், சினேவீவ், டிராட்ஸ்கி, போன்ற எதிர் புரட்சிக்காரர்கள் லெனினைத் தற்காலிக சர்க்காரிடம் காட்டிக் கொடுக்க முயற்சித்தார்கள். ஸ்டாலின் அதற்கு இடம் கொடுக்கவில்லை. கட்சிக்காகவும், ரஷ்ய மக்களுக்காகவும், மனித சமுதாயத்திற்காகவும் ஸ்டாலின் புருஷோத்தமரான லெனினைப் பாதுகாத்தார். அக்காலத்தின் மத்திய கமிட்டியின் வேலையை ஸ்டாலினே நேரடியாகக் கவனித்தார். மிருகத்தனமான அடக்குமுறைக்குப் பிறகு நிலைமையில் முக்கிய மாறுதல் ஏற்பட்டது. கட்சியின் ஆறுவது காங்கிரஸ் இரகசியமாகக் கூடியது. அதில் ஸ்டாலின் ஒரு அறிக்கை வெளியிட்டார். ரஷ்யாவில் சோஷலிஸம் வெற்றி பெற முடியாது என்ற டிராட்ஸ்கிய வாதிகளின் விவாதத்திற்குத் தக்க பதில் கொடுத்தார்,

"ரஷ்யா சோஷலிஸப் பாதையில் போகும் என்பதைப் புறக்கணிக்க முடியாது. ஐரோப்பாதான் வழிகாட்டும் என்ற பழமையான கொள்கையை நாம் கைவிடவேண்டும். வரட்டுமார்க்ஸிஸம் ஜீவன் உள்ள மார்க்ஸிஸம் என்று இரு வகைப்படும் நான் பின்பற்றுவது ஜீவன் உள்ள மார்க்ஸிஸம்" ஸ்டாலின் வார்த்தைகள் தீர்க்கதரிசனமாகின. ரஷ்யாதான் முதன் முதல் சோஷலிஸப் பாதையைக் காட்டியது. புரட்சியை நடத்துவதற்கென கமிட்டி ஒன்றை அக்டோபர் 16ல் மத்திய கமிட்டி தேர்ந்தெடுத்தது. ஸ்டாலின் அதற்குத் தலைவரானுர். அக்டோபர் 14ல் மத்திய கமிட்டியின் பத்திரிகாலயத்தை முற்றுகை யிடும்படி கெரன்ஸ்கி உத்தரவிட்டான். ஆயுதம் தாங்கிய போர்வீரர் அதைச் சூழ்ந்து நின்றுர்கள். அதே வினாடியில் செம்படையினர் கெரன்ஸ்கியின் போர்வீரர்களை விரட்டியடித்து பத்திரிகாலயத்தைப் பாதுகாத்தார்கள். பிறகு முதலாளிகளின் தற்காலிக அரசாங்கம் கவிழ்ந்தது. 25ம் தேதி கூடிய சோவியத் இரண்டாவது காங்கிரஸ் அரசாங்க அதிகாரத்தை சோவியத்களுக்கு மாற்றியது. புரட்சி வெற்றி அடைந்தது.

புரட்சியில் விழ்ச்சியுற்ற மிராசுதார்களும், முதலாளிகளும் அன்னிய நாடுகளுடன் தொடர்பு கொண்டு சோவியத் ஆட்சியைக் கவிழ்க்கச் சதிசெய்தார்கள். உள் நாட்டுக் கலகம் எழுந்தது. டிராட்ஸ்கியும் அவா கூட்டாளிகளும் சோவியத் விரோதிகளுடன் சேர்ந்து சோவியத் சர்க்காரை கவிழ்க்க முயன்ருர்கள். லெனின் ஸ்டாலின் ஆகிய இருவர் தலைமையில் போல்ஷவிக் கட்சி செஞ்சேனை அமைத்துத் திறமையாகப் போரிட்டதால் சோவியத் மக்கள் வெற்றி பெற்றனர் சோவியத் ஆட்சியை அழிப்பதற்காக மார்தட்டி நின்ற பதின் மூன்று முதலாளித்துவ நாடுகளின் எதிர்ப்பையும் முறியடித்து சோவியத் அமைப்பைக் காப்பாற்றிய பெருமையில் பெரும் பங்கு செஞ்சேனைக்கு உரியது. செஞ்சேனை உலகில் ஒரு புதுமை. அது தொழிலாளர் விவசாயிகளிடையே எழுந்ததால் சகோதரத்து வமும் சர்வதேச உணர்ச்சியும் உடையது. உள் நாட்டுப் போரில் செஞ்சேனை தயக்க

முற்ற போர் முனைகளுக் கெல்லாம் ஸ்டாலின் போய் வெற்றிக் கொடி நாட்டினர்.

நான்கு வருட ஏகாதிபத்யப் போரும் மூன்று வருட உள் நாட்டுப் போரும் நாட்டை பாழ் படுத்தின. எனவே சோவியத் யூனியன் பொருளாதார அபிவிருத்தியில் இறங்கியது.

உலகபாட்டாளிகளின் தலைவரும் போல்ஷ்விக் கட்சியின் அமைப்பாளருமான லெனின் 1924 ஜனவரி 21ல் காலமானர். அவருக்கு மரியதை செய்வதற்காக ஜனவரி 26ல் அகில யூனியன் சோவியத் காங்கிரஸின் இரண்டாவது கூட்டம் நடந்தது. கட்சியின் சார்பாக ஸ்டாலின் சபதம் எடுத்தார்.

"கம்யூனிஸ்டுகளாகிய நாம் தனிவார்ப்பு தனி தாதுக்களால் செய்யப்பட்டவர்கள். தோழர் லெனினல் அமைக்கப்பட்ட செஞ் சேனையைச் சேர்ந்தவன் என்று கூறிக் கொள்ளும் பெருமையைக் காட்டிலும் சிறந்தது வேறொன்றும் இருக்கமுடியாது"

தோழர் லெனின் நம்மைப் பிரியும்போது கட்சியின் ஒற்றுமை, பாட்டாளி மக்களின் சர்வாதிகாரம் தொழிலாளர் விவசாயிகள் கூட்டுறவு ஆகிய ஆக்கவேலைகளில் முழுகவனம் செலுத்தும்படி நமக்குக் கட்டளையிட்டார்.

"நம் நாட்டின் பல தேசிய இனங்களும் விருப்புடன் தாமாகவே சேர்ந்து கொள்ளவும் பிரிந்து போகவும் உரிமை அளிக்கும் சுயநிர்ணயக் கொள்கையை தோழர் லெனின் நமக்கு வற்புறுத்தினர்"

"செஞ்சேனையைப் பலப்படுத்தி அதை வளர்க்க வேண்டியது நமது கட்சியின் முக்கிய வேலைகளில் ஒன்று என்பதாக ,தோழர் லெனின் நமக்கு எடுத்து காட்டினர்."

"கம்யூனிஸ்டு அகிலத்தின் கொள்கைகளில் விசுவாசம் உள்ளவர்களாக இருக்கவேண்டுமென்று தோழர் லெனின் நமக்கு அறிவுறுத்ததினர்."

"ஆம், நாம் இன்னுயிர் ஈந்தும் தோழர் லெனின் கட்டளைகளை நிறைவேற்றுவோம்" என்று ஸ்டாலின் கூறினர்.

லெனின் இறந்ததும் டிராட்ஸ்கி கூட்டத்தார் சோவியத் அரசாங்கத்தைக் கவிழ்க்க முயற்சித்தார்கள். ஸ்டாலினுடைய கொள்கைத் தெளிவினால் மக்கள் அவர்களை முறியடித்தனர்.

கடினமான பிரச்னைகளில் ஸ்டாலின் லெனினுடைய போதனைகளைப் பின்பற்றினார். ஜெர்மன் எழுத்தாளர் எமில் லட்விக் என்பவரிடம் லெனினுடைய ஆற்றலை ஸ்டாலின் பாராட்டினார். "நான் லெனின் மாணவன். அவருடைய மாணவன் என்று கூறிக் கொள்ள நான் உரியவன் என்பதை நிலை பெறச் செய்வதே என் குறிக்கோள் என்றார்.

அத்தியாயம் 3.

லெனின் மின்சாரத்திற்கு மிகமுக்கியத்துவம் தந்தார். மின்சாரமும் தொழிலும் சேர்ந்ததுதான் சோஷலிஸம், என்று அவர் கூறுவதுண்டு.

லெனின் கருத்தைப் பின்பற்றி ஸ்டாலின் தொழில் களைப் பெருக்கினார். தொழிலைப் பெருக்குவதென்றால், பொருளுற்பத்தியைப் பெருக்குவது மட்டுமல்ல. பெரிய பெரிய இயந்திரங்களையும் செய்வது என்பதே பொருள். அப்படிச் செய்வதால் சோஷலிஸப் பொருளாதாரத் திற்கு விரிவான அடிப்படை போடமுடியும்.

முதலாளிகள் மிராசுதார்கள் ஆகியோருக்கு தனி வுடைமைகளா யிருந்த ஆலைகள், சுரங்கங்கள், பாங்கிகள், சாதனங்கள் பொதுச்சொத்தாக மாறுவதாலும், மனிதன் உழைப்பை மனிதன் அபகரிக்கும் அநீதி ஒழிவதாலும், சோஷலிஸ அமைப்பின் பொருளாதாரம் பெருகி, தொழில் வளர்ச்சியுற ஏதுவாகும். சோஷலிஸ தொழில் முறைக்கும் முதலாளித்துவ தொழில் முறைக்கும் அடிப்படையில் வேறுபாடுஉண்டு; குடியேற்ற நாடுகளை கைப்பற்றி, அவற் றைக் கொள்ளையடித்தல், கொடிய நிபந்தனைகளின்பேரில் கடன் கொடுத்தல், மக்களின் உழைப்பைச் சுரண்டுதல் ஆகிய அடிப்படையின் மீது, முதலாளித்துவம் தொழில் களைக் கட்டுகிறது. ஆனால் சோஷலிஸம் பொருளுற்பத் திச் சாதனங்களை சமூகப் பொதுச் சொத்தாக்கி, மக்களின் வாழ்க்கையை உயர்த்துவதற்கான திட்டத்தின் மீது தொழில்களைக் கட்டுகிறது.

எனவே, தொழில்களைக் கட்டுவதின் முக்கிய நோக் கங்களாவன; பொருளுற்பத்திச் சக்தியை அதிகரிப்பது குறைந்த செலவில் பொருள்களை உற்பத்தி செய்வது;

உழைப்புக் கட்டுப்பாட்டை இரும்புப் பிடியாக்குவது; மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவது போன்றன.

சோவியத் யூனியனில் சோஷலிஸத் திட்டமும், தொழிலாளி வர்க்கத்திற்குக் கொடுக்கப்பட்ட உத்சாகமும் ஊக்கமும் சேர்ந்து, தொழில் பெருகுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தியது. குறைந்த கால அளவில் புதிய புதிய இயந்திரங்கள் அமைக்கப்பட்டன. விவசாயக் கலப்பைகளும் இயந்திரக் கலப்பைகளும் புதிய முறையில் செய்யப்பட்டன. இயந்திரங்களின் துணையாலும் மின்சார உதவியாலும் தொழிலும் விவசாயமும் பெருகின. எனவே 1931-ம் வருடத்திலிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்தது.

நகரங்களில் தொழில் வளர்ச்சியுறுகிறபொழுது கிராமங்களில் பழைய முறையில் விவசாயம் நடந்து கொண்டிருந்தது. அது நகரங்களின் பொருளாதாரத்தையும் பாதிப்பதாக இருந்தது. எனவே 1927 டிசம்பர் மாதம் கூடிய பதினைந்தாவது காங்கிரஸில் ஸ்டாலின் கூறியதாவது:

"துண்டு துக்காணி நிலத்தில் சாகுபடி செய்வதைக் கைவிட்டு, கூட்டு முறையில் விவசாயம் நடைபெறவேண்டும். இயந்திரங்களின் உதவி கொண்டு பயிர் செய்யவேண்டும். சின்னஞ்சிறிய விவசாயிகள் தாங்களாகவே விருப்பத்துடன் ஒன்று சேர்ந்து விரிந்த நிலப்பரப்பில் புதிய முறையில் விவசாயம் செய்யவேண்டும். நகரங்களும் கிராமங்களும் ஒரே சீராக முன்னேற இதைத் தவிர வேறு வழி இல்லை.

விவசாயிகளின் உழைப்பைக் கொள்ளை கொண்ட நிலச்சுவான்கள் கூட்டுப்பண்ணை முறையைக் கடுமையாக எதிர்த்தனர். பாவம் கிராம வாசிகளைப் பொய்ப்பிரசாரத்தினால் மருளச் செய்தனர். டிராட்ஸ்கிய வாதிகளும் மென்ஷ்விக்குகளும் மிராசுதார்களுடன் சேர்ந்து, சோவியத் எதிர்ப்பில் ஈடுபட்டனர். மக்களின் கொள்கைப் பிடிப்பினால் அவர்கள் முயற்சி தோல்வியுற்றது.

கூட்டுப்பண்ணை முறை வெற்றி பெற்றதானது, பெரிய மாறுதல் உண்டுபண்ணியது. அதை ஒரு புரட்சி என்றே சொல்லவேண்டும். அந்த வெற்றிக்கு முக்கிய காரணம் ஸ்டாலின் தலைமை என்று கூறுவது மிகையாகாது.

1930-ல் தலைமையைப் பற்றிச் சொல்லும்பொழுது ஸ்டாலின் குறிப்பிட்டதாவது: **"தலைமை ஒரு கலை. அது எளிதல்ல. மக்கள் செயலாற்றும்போது தலைவன் மக்களிட மிருந்து விலகியவனுவான். முன்னுல் பாய்ந்து செல்லவும் கூடாது. அப்படிச் சென்ருல் மக்களின் தொடர்பு அறுந்துபோகும். மக்கள் இயக்கத்தை நடத்துகிறவன் இரு முனைகளில் போர் புரிய வேண்டியிருக்கும். ஒன்று மக்களுடன் சேராமல் பின் தங்குபவர்கள் மறருென்று மக்களுக்கு முன்னே செல்பவர்கள்."**

ஸ்டாலின் வகுத்த ஐந்தாண்டுத் திட்டங்களினுல், சோவியத் யூனியன் பொருளாதாரத் துறையில் முன்னேறியது. மக்களின் வாழ்க்கையும் பண்பாடும் ஒரே சீராக உயர்ந்தன.

முதலாளித்வ உலகில் பொருளாதார நெருக்கடிபால் மக்கள் அவதியுற்ருர்கள். ஜெர்மனியில் பாசிசம் ஆதிக்கத்திற்கு வந்தது முதல் பல நாடுகளில் போருக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. ஆனுல் சோவியத் யூனியன் தனது சமாதானக் கொள்கையில் உறுதியாக நின்றது. அப்பொழுது சோவியத் யூனியனின் அயல் நாட்டுக் கொள்கையை ஸ்டாலின் தெளிவாக்கினுர்.

"நமது அன்னிய நாட்டுக் கொள்கை மிகத் தெளிவானது. சமாதானத்தைக் கடைப்பிடித்து வியாபாரத் தொடர்பைப் பலப்படுத்துவது. சோவியத் யூனியன் எந்த நாட்டையும் தாக்காது. நமது கொள்கை சமாதானம் ஆனுல் போர் வெறியர்களைக் கண்டு நாம் நடுங்கப் போவதில்லை. அடிக்கு அடி. உதைக்கு உதை கொடுப்போம். நமது நாட்டைத் தாக்குகிறவர்களுக்குச் சரியான பாடம் கற்பிப்போம்."

தொடக்கத்தில் சோவியத் யூனியனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய முதலாளிகள் மிராசுதார்கள், மதக்

குருக்கள், ஜார் அதிகாரிகள் ஆகிய சோவியத் விரோதிகளுக்கு வோட் உரிமை போன்ற ஜனநாயக உரிமைகள் 1924-ம் வருட அரசியல் திட்டத்தில் மறுக்கப்பட்டிருந்தன. நாளடைவில் வர்க்க விரோதிகள் ஒழிந்து வர்க்கபேத மற்ற சமுதாயமாகி விட்டபடியால் 1936-ம் வருடத் திட்டத்தில் அனைவருக்கும் ஜனநாயக உரிமைகள் வழங்கப்பட்டன. புதிய திட்டத்தை மக்கள் அன்புடன் வரவேற்றார்கள்.

தேர்தலில் 100-க்கு 97 நபர்களுக்கும் கூடுதலாகவே கலந்துகொண்டனர். "தொழிலாளிவர்க்கத்தின் சோஷலிஸ இயக்கத்தையும் தலை சிறந்த ஜனநாயகத்தையும் ஒழித்துக்கட்ட பாசிசம் முனைந்து நிற்கின்ற இக்காலத்தில் சோவியத் திட்டம் ஓர் சிறந்த ஆயுதம்" என்றார் ஸ்டாலின். முதலாளித்துவ உலகின் மத்தியில் சோவியத் யூனியன் தன்னந்தனியாக நிற்கமுடியும். அதற்கு சோஷலிஸ அரசாங்கம் மிகப் பலம் பொருந்தியதாக இருக்க வேண்டும். சோஷலிஸ சமுதாயத்தை அமைத்தவுடன் கட்சியின் வேலை முடிந்துவிடவில்லை. கம்யூனிஸ சமுதாயத்தை நோக்கிச்செல்ல போல்ஷ்விக்குகள் விஞ்ஞான அறிவுள்ளவர்களாக இருககவேண்டும். மார்க்ஸிஸம், லெனினிஸம் ஆகிய கொள்கைகளில் தெளிவுவேண்டும். சமுதாய வளர்ச்சி, பாட்டாளிமக்கள் புரட்சி, சோஷலிஸ புனர்நிர்மாணம் ஆகியவற்றை நுணுகி ஆராயவேண்டும். லெனின் வழியைப் பின்பற்றுகிறவர்கள் கணக்கு அல்லது ரசாயனத்துறையில்மட்டும் பயிற்சி பெற்றிருந்தால் போதாது. அவன் அரசியல் அல்லது சமூகத்துறையில் வேலை செய்பவனாகவும் இருக்கவேண்டும். நாட்டின் முன்னேற்றத்தில் கருத்துள்ளவனாகவும் இருக்கவேண்டும் என்பது ஸ்டாலின் கருத்து.

முதலாளித்துவ நாடுகள் போரில் இறங்கும் தருவாயில் இருந்தன. பிரிட்டன், பிரான்ஸ், ஆகிய இரு நாடுகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ள சோவியத் யூனியன் விரும்பியது. அவ்விரு நாடுகளும் அதற்கிணங்கவில்லை. எனவே 1939-ல் ஸ்டாலின் விருப்பப்படி சோவியத் யூனியன் ஜர்மெனியுடன் அனுக்கிரமிப்பு ஒப்பந்தம்

செய்தது. இதனால் தற்பாதுகாப்பை மேலும், பலப்படுத்த அதற்கு வாய்ப்புக்கிடைத்தது. சோவியத் மக்கள் கம்யூனிஸ சமுதாயத்தை நிர்மாணித்துக்கொண்டிருக்கும் பொழுது 1941 ஜூன் மாதத்தில் ஜெர்மனி சோவியத் யூனியனைத் தாக்கியது. ஸோவியத் மக்களின் மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டம் இரண்டாவது உலகப் போரினால் தடைப்பட்டது.

சோவியத் யூனியனுடன் செய்திருந்த அனாக்கிரமிப்பு ஒப்பந்தத்தைக் காற்றில் பறக்கவிட்டான் பாசிசவெறியன் ஹிட்லர். எவ்வித முன்னறிவிப்புமில்லாமல் சோவியத் யூனியனைத் தாக்கினான்.

போரை நடத்தும் பொறுப்பை ஸ்டாலின் ஏற்றுக் கொண்டார். 1941 ஜூலை 3-ல் ஸோவியத் மக்களுக்கும் ஸோவியத் இராணுவத்திற்கும் பாசிச அரக்கனின் நோக்கத்தை ஸ்டாலின் தெளிவுபடுத்தினார்.

"நமது விரோதி, கொடியவன், நமது வியர்வையாலும் இரத்தத்தாலும் செழிப்புறச் செய்த பூமியைக் கவர்ந்து கொள்வதற்காக நிற்கிறான்; ஜார் ஆட்சியை நிலைநாட்ட விரும்புகிறான். பலதேசீய இனங்களையும் அழிக்கத்திட்டமிட்டிருக்கிறான். விடுதலை பெற்ற சோவியத் மக்களை ஜெர்மன் பிரபுக்களுக்கு அடிமையாக்க கருதுகிறான். சோவியத் அரசாங்கம் வாழ்வதா? சாவதா? சோவியத் மக்கள் சுயேச்சையாக இருப்பதா? அடிமைகளாவதா? என்ற நிலைமை தற்போது ஏற்பட்டு இருக்கிறது. இந்தப் போரில் சோவியத் மக்கள்மட்டும் தனித்து நிற்கமாட்டார்கள். சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாக்க விரும்புகிற உலக மக்களின் ஐக்கிய முன்னணி ஏற்படும். செஞ்சேனை பின்வாங்க நேரிட்டால் ஒருதான்யமோ ஒரு துளி எண்ணெயோ, எதிரியின் கையில் சிக்காதபடி அவ்வளவையும் எரித்துச் சாம்பலாக்கவேண்டும். மக்கள் சக்தி அனைத்தையும் திரட்டுங்கள். வெற்றியைநோக்கி முன்னேறுங்கள் என்று ஸ்டாலின் மக்களுக்கும் ராணுவத்திற்கும் வேண்டுகோள் விடுத்தார்.

சோவியத் மக்கள் அனைவரும் தாய் நாட்டைக் காக்க முன் வந்தனர், செஞ்சேனையும் சோவியத் மக்களும் செய்த ஒப்பற்ற தியாகத்தினால் மக்களின் விரோதியான கொடிய பாசிசம் வீழ்ச்சியுற்றது. உலக மக்களின் சுதந்திரமும் ஜனநாயகமும் பாதுகாக்கப்பட்டன. நாஜிக்கோட்டையான பெர்லின் மீது செஞ்சேனை 1945 மே 2-ல் வெற்றிக் கொடி நாட்டியது.

பாஸிஸத்தை முறியடித்து, உலக மக்களின் சுதந்திர ஆர்வத்துக்கும் சுபிட்ச வாழ்வுக்கும் புதுப்பாதை வகுத்துத் தந்தவர் மார்ஷல் ஸ்டாலின். யுத்தத்தினால் ஏற்பட்ட கோர விளைவுகளினின்று மீண்டு யுத்த வெறியர்களின் கொடிய தாக்குதலுக்கு இரையான ரஷ்யாவை ஐந்தே ஆண்டுகளில் வியக்கத்தக்க வகையில் சீர்படுத்தி உன்னத ஸ்தானத்துக்கு உயர்த்திவைத்தவர் ஸ்டாலின். அவரது கொள்கைகளுக்கு கிழக்கு ஐரோப்பாவில் வேறு பல நாடுகளிலும் ஆதரவு கிடைத்தது. உலகிலே பலம் வாய்ந்த வல்லரசாக ரஷ்யாவை உருவாக்கிய பெருமை மாவீரர் ஸ்டாலினையே சாரும்.

மார்க்ஸீய அடிப்படையில், லெனின் வகுத்த பாதையில் ரஷ்யாவிலே சோஷலிஸத்தை நிலை நிறுத்தி, சுவர்க்க பூமியை ஏற்படுத்தியவர்.

1953-ம் ஆண்டு மார்ச் 6-ந்தேதி மார்ஷல் ஸ்டாலின் இயற்கை எய்தினார் என்று வந்த செய்தி ரஷ்யமக்களை மட்டுமல்ல—உலகெங்கிலுமுள்ள சுதந்திரத்திலும் சோஷலிஸத்திலும் நம்பிக்கை கொண்ட அனைவரையும் துயரக் கடலில் ஆழ்த்திவிட்டது. சமாதானத்தையே தமது லட்சியமாகக் கொண்டு அதற்கெனப் பாடுபட்ட பாட்டாளி மக்களின் தலைவர் இன்று நம்மிடையே யிருந்து

இயற்கையினல் பிரிக்கப்பட்டு விட்டார். ஆம் அவர் நம் மிடையே இல்லை. ஆனாலும் அவரது நாமம் என்றென்றும் உலகிலே நிலைத்திருக்கும். அவரது சாதனைகளை பாட்டாளி வர்க்கம் மறந்து விடுவதென்பது முடியாது.

வாழ்க ஸ்டாலின் நாமம்

★ **ஸ்டாலின் 0-4-0**

சிந்து பூந்துறை S. சண்முகம்

* சேலம் சிறையிலே......? 0—4—0

கு. சேதுராமன்.

காரல் மார்க்ஸ் இல் வாழ்க்கை 0—6—0

டாக்டர் எத்கார் லோங்கே

நீயும் நானும் (கதைகள்) 0—10—0

ரகுநாதன்

செம்மலர்கள் (கதைகள்) 0—6—0

கிருஷ்ண சந்தர்

ரயில் சொன்ன கதை 0—2—0

தமிழ் ஒளி

நீ எந்தக்கட்சியில்? 0—4—6

தமிழ் ஒளி

முழுவிபரத்திற்கு எழுதுங்கள்.

உண்மைப்பிரசுரம்

தேவகோட்டை.

* இந்த அடையாளமுள்ள புத்தகங்கள் புதிய வெளியீடுகள்